கிடைக்கப்பெற்றவுடன் அரசு ஒப்புதல் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 98, திரு. ப. பெரியசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

98—

ஊத்துக்குளி-குன்னத்தூர் குடிநீர் திட்டம்

***69536**—திரு. ப. பெரியசாமி:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம், பெருந்துறை தொகுதியில் ஊத்துக்குளி ஒன்றியத்தில் உள்ள கிராமங்களுக்கு ஊத்துக்குளி குன்னத்தூர் கூட்டுக்குடிநீர் திட்டத்தில் தண்ணீர் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைந்து இத்திட்டத்தை செயல்படுத்தி குடிநீர் வழங்க அரசு போர்க்கால அடிப்படையில் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

• (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் போர்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ப. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு கோடி மக்களுடைய இதய துடிப்பு, ஏழை எளிய மக்களின் வாழ்விற்காக அல்லும், பகலும் அயராது பாடுபட்டு வரும் சமூக நீதிக் காத்த வீராங்கனை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் எங்களுடைய வழிபாட்டிற்குரிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய போர்க்கால ஆட்சியில் பெருந்துறை தொகுதியில் ஊத்துக்குளி ஒன்றியத்தில் ஊத்துக்குளி –குன்னத்தூர் பேரூராட்சிகளுக்கு அதனைச் சுற்றிலுமுள்ள மற்ற ஊர்களுக்கும் சுத்திகரிக்கப்பட்ட ஆற்று நீரை குடிநீராக வழங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விரைவான ஒரு செயற்பாட்டை உருவாக்கினார்கள். பூர்வாங்கமான வேலைகள் அத்தனையும் முடிந்த பிறகு குழாய்களில் நீரை ஏற்றுகின்றபோது குழாய்கள் வெடித்து விடுவதால் குடிநீர் வழங்குவதில் கால தாமதம் ஏற்படுகிறது. விரைவாக குடிநீர் வழங்குவதற்கு திட்டத்தை இன்னும் சிறிது மாற்றி புதிதாக

கொழப்பலூருக்கும் குன்னத்தூருக்கும் இடையில் புதிய பம்பிங் ஸ்டேஷன் உருவாக்கியோ அல்லது குழாய்களை மாற்றியோ விரைவில் முடித்துத் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலிங்கியம், கொழப்பலூர், சிருவாலூர், குன்னத்தூர் மற்றும் ஊத்துக்குளி ஆகிய 5 பேரூராட்சிகளுக்கான காவிரி நதியை ஆதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டு தற்போது அந்தத் திட்டம் இன்றைக்கு சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. இன்றைக்கு நிலவி வருகிற வறட்சியைக் கருதி ஏற்கனவே ஊத்துக்குளி ஒன்றியத்திலுள்ள 179 வழியோர கிராமங்களோடு கூடுதலாக 38 வழியோர கிராமங்களும் சேர்க்கப்பட்டு மொத்தம் 217 வழியோரக் கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு உத்தேச மதிப்பீடு இன்றைக்கு அவசர, அவசியத்தைக் கருதி போர்க்கால அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்து வருகிறது. இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்தபின் ஒரு வருடத்திற்குள்ளாக பணிகள் துவங்கி இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 99. திரு. செ. பெருமாள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

99—

பெரும்பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தைப் பிரித்தல்

***9603**—*திரு. செ. பெருமாள்:*

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

ஏற்காட்டில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் இயங்கும் பெரும்பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தை இரண்டாக பிரித்து கொட்டசேடு கிராமத்தை மையமாக வைத்து கூட்டுறவு சங்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏற்காடு பெரும்பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தை இரண்டாகப் பிரித்து கொட்டசேட்டை தலைமையிடமாகக் கொண்டு ஒரு பெரும் பல நோக்குக் கூட்டுறவு சங்கம் அமைப்பதற்கான முன்மொழிவுகள் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் பரிசீலனையில் உள்ளது.